குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம்.
முன்னிலை: திரு.R.கைலாஷ், B.A., B.L.,
நீதித்துறை நடுவர், சீர்காழி.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30ஆம் நாள் திங்கள்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.179/2025
CNR.NO.TNMY08-0002510-2025

| | |
|---|---|
| குற்றமுறையீட்டாளர் : | அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>சீர்காழி காவல் நிலையம்,<br>மயிலாடுதுறை மாவட்டம்,<br>குற்ற எண். 260/2013 |
| /எதிராக/ | |
| குற்றம்சாட்டப்பட்டவர்: | Splitted from Mother Case CC.No. 195/2013<br>1. தமிழரசன் (எ) செல்லப்பா 22/2013 த/பெ. ரவி தாடாளன்கோவில், காமராஜபுரம், சீர்காழி தாலுகா<br>2. மணிகண்டன் 24/2013, த/பெ.அய்யாசாமி, பாலாக்குடி, 24,வில்லியநல்லூர், மயிலாடுதுறை (இறந்து விட்டார்) |
| குற்றச்சாட்டு | இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் 457,380 |
| குற்றம் நிகழ்ந்த நாள் | 17.06.2013 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 18.06.2013 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | 15.01.2026 |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | - |
| கு.வி.மு.ச.பிரிவு 240-ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து எதிரியிடம் கேட்கப்பட்ட நாள் | 23.03.2026 |
| விசாரணை தொடங்கிய நாள் | 24.03.2026 |
| விசாரணை முடிவடைந்த நாள் | 26.03.2026 |
| BNSS 359-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விபரம் | -- |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட தேதிகள் | (see below) |
| கு.வி.மு.ச.பிரிவு 313(1)(b)-ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 24.03.2026 |

| | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி.1 | 24.03.2026 | 24.03.2026 |



KAILAASH R Digitally signed by KAILAASH R Date: 2026.03.30 21:17:01 +0530

| | |
|---|---|
| தலைமறைவு எதிரி குறித்த விபரம் | இல்லை |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விபரம் | இல்லை |
| வழக்கு விசாரணையில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணம் | போலிசார் எதிரிக்கு எதிரான பிடியாணையை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டது. |
| தீர்மானம் | எதிரி இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 457,380 ன் கீழ் குற்றவாளி என தீர்மானம். |
| முடிவு | 2ம் எதிரி இறந்துவிட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது. முடிவாக, அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக எதிரி தமிழரசன் (எ) செல்லப்பா மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 457,380ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரியை மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என குற்ற விசாரணை முறை சட்டம் 248(1) பிரிவின் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

இவ்வழக்கின் தாய் வழக்கானது இந்நீதிமன்றத்தால் கடந்த 30.07.213 தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்பு 26.08.2025 அன்று இந்த எதிரிகளுக்கு எதிராக மட்டும் பிரித்தெடுக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு, என் முன்பாக இறுதியாக 30.03.2026 ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது, குற்ற முறையீட்டாளர் தரப்பில் உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–II திருமதி. K. நிவேதா அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. சரவணன் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இன்று நீதிமன்றம் வழங்கிடும்

## <u>தீர்ப்புரை</u>

1. இவ்வழக்கானது, கடந்த 17.06.2013ம் தேதி இரவு 01.00 மணிக்கு மேல் சீர்காழி, கோவில்பத்து பள்ளிவாசல் தெருவில் உள்ள சாட்சி–1 ஹபீபுல்லா என்பவர் வீட்டின் மாடியில் இருந்த ஜன்னல் கம்பிகளை எதிரிகள் மூவரும் சேர்ந்து நெம்பி உடைத்து, அதன் வழியாக உள்ளே சென்று வீட்டில் இருந்த சோனி TV, DVD பிளேயர் மற்றும் தையல் மிஷின் போன்ற ரூ.38,000/– மதிப்புள்ள பொருள்களை திருடிச் சென்றது சம்பந்தமாக, மேற்படி எதிரிகளின்



KAILAASH R Digitally signed by KAILAASH R Date: 2026.03.30 21:17:10 +0530

செயல் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 457, 380ன் கீழ் தண்டிக்கத்தக்கது என்று கருதி சீர்காழி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 173(2)ன் கீழ் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்கு ஆகும்.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் எதிரிக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால் வழக்கானது இந்நீதிமன்றத்தால் கடந்த 30.07.2013ம் தேதி அனைத்து எதிரிகளுக்கு எதிராகவும் கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரிகள் தமிழரசன் (எ) செல்லப்பா மற்றும் மணிகண்டன் ஆகியோருக்கு எதிராக நீண்ட நாட்களாக பிடியாணை நிலுவையில் இருந்ததால் மேற்படி நபர்களுக்கு எதிராக வழக்கு 26.08.2025 அன்று பிரித்தெடுக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டது. எதிரி தமிழரசன் கைது செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் 23.03.2026ம் தேதி குற்றவியல் நடைமுறை சட்டப் பிரிவு 207ன் கீழ் வழக்கு ஆவணங்களின் நகல் கட்டணமின்றி வழங்கப்பட்டது. இருதரப்பு வாதங்களையும் கேட்டு கடந்த 23.03.2026ம் தேதி எதிரியின் செயல் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 457,380ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, குற்றச்சாட்டின் சாராம்சங்கள் குறித்து எதிரியிடம் விளக்கி கேட்டபோது, எதிரி 'பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை வேண்டுமென்றும்' கூறினார். எனவே, இவ்வழக்கு சாட்சிகளின் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் அரசு தரப்பில் அரசு தரப்பு சாட்சி.1 சாட்சி விசாரணை செய்யப்பட்டு, அரசு தரப்பு சான்றாவணம்.1 முதல் 7 குறியீடு செய்யப்பட்டது. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 10 சாட்சி ஆகியோர்களை உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் அளித்த பரிந்துரையின் அடிப்படையில் விசாரிக்கப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்கின் தாய் வழக்கான CC.No.195/2013 வழக்கில் சாட்சிகள் பிறழ்சாட்சிகளாகி அதன்பேரில் எதிரி ஆதித்தன் என்பவர் விடுதலை செய்யப்பட்டுவிட்டதால் மீண்டும் இந்த பிரித்தெடுக்கப்பட்ட வழக்கில் சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை. அதற்கு மாறாக சீர்காழி காவல் நிலையத்தின் தற்போதைய உதவி ஆய்வாளர் மாத்திரம் கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்தார். அதே போல இவ்வழக்கின் எதிரியான மணிகண்டன் த/பெ அய்யாசாமி என்பவர் இறந்து விட்டதாக ஆவணம் அரசுதரப்பால் தாக்கல் செய்யப்பட்டு அதன்பேரில் அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது. ஆகவே, இந்த தீர்ப்பு எதிரி தமிழரசனை மட்டுமே கட்டுப்படுத்தும்.



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:17:16 +0530

4. இவ்வழக்கில் கடந்த 24.03.2026ம் தேதி அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சாட்சியம் குறித்து, அவற்றை கேள்விகளாக தொகுத்து குற்ற விசாரணை முறை சட்டம் 313(1)(b) பிரிவின் கீழ் வினவியபோது, அதனை மறுத்து எதிரி 'பொய் சாட்சி, பொய் வழக்கு' என்றும், தனது தரப்பில் விசாரிக்க வாய்மொழி சாட்சி இல்லை என்று கூறினார். ஆகவே, எதிரி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது. இருதரப்பு சாட்சிய விசாரணைகள் முடிக்கப்பட்டதால் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

5. அரசு தரப்பில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் மூலமாகவும், அரசு தரப்பு சாட்சி–1ன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ள அரசு தரப்பு சான்றாவணம்.1 முதல் 7 ஆவணங்கள் வாயிலாகவும், அரசு தரப்பு வழக்கை எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

6. இவ்வழக்கின் குற்ற சம்பவத்தை கண்ணுற்ற நேரடி சாட்சிகள் யாரும் இல்லை என்றும், காவல்துறை அதிகாரியின் சாட்சியத்தையும் வைத்து எதிரி குற்றவாளி என்று முடிவு செய்ய முடியாது என்றும், எனவே, எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எதிரியை வழக்கில் இருந்து விடுதலை செய்து உத்தரவிட வேண்டுமாறும் வாதிடப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்கபட வேண்டிய பிரச்சனைகள்

i) இவ்வழக்கில் எதிரி மீதான இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 457,380ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**8.தீர்வு:–**

8.1) அரசு தரப்பு வழக்கு எவ்வாறு அமைந்துள்ளது மற்றும் இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, இவ்வழக்கில் சீர்காழி தாலுக்கா, கோவில்பத்து என்னும் ஊரில் அமைந்துள்ள பள்ளிவாசல் தெருவில் இருக்கும் ஹபிபுல்லா என்பவரது வீட்டில் திருட்டு சம்பவம் நடந்துள்ளது. இவ்வழக்கின் புகார்தாரரும் சாட்சி–1ம் ஆன லியாகத்அலி என்பவர் மேற்படி ஹபிபுல்லாவின் உறவினர் ஆவார். கடந்த 2013ம் வருடம் ஜூலை மாதத்தில் ஹபிபுல்லாவின் குடும்பத்தினர் அனைவரும் மேற்படி வீட்டை பூட்டிவிட்டு, நெடுஞ்செழியன் என்னும் காவலாளியை காவலுக்கு வைத்துவிட்டு



KAILAASH R Digitally signed by KAILAASH R Date: 2026.03.30 21:17:25 +0530

துபாய்க்கு சுற்றுலா சென்று உள்ளார்கள். அச்சமயம் கடந்த 17.06.2013 அன்று இரவு நெடுஞ்செழியன் வீட்டின் முன் இருக்கையில், யாரோ திருடர்கள் மாடியில் ஜன்னலை உடைத்துக்கொண்டு வீட்டின் உள்ளே வந்து திருடியுள்ளார்கள். அது குறித்த தகவல் புகார்தாரருக்கு கொடுக்கப்பட்டு, அவர் அந்த வீட்டிற்கு சென்று பார்த்து வீட்டில் வைத்திருந்த LCD TV, DVD Player, Home Theatre Unit மற்றும் தையல் மிஷின் ஆகியவை திருடு போய் உள்ளது பற்றி தெரிந்து கொண்டு அதன் பிறகு கடந்த 18.06.2013ம் தேதி மதியம் 01.00 மணியளவில் சீர்காழி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்துள்ளார். அதை தொடர்ந்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு புலன்விசாரணையில் இருந்து வந்த நிலையில், போலிசார் இவ்வழக்கில் துப்பு துலக்க சீர்காழி ரயில் நிலையம் அருகே விசாரித்துக் கொண்டிருந்தபோது, அங்கிருந்த திடல் அருகில் நின்று கொண்டு இவ்வழக்கின் எதிரிகள் மூவரும் சந்தேகப்படும்படியாக நின்று கொண்டு பேசிக்கொண்டுள்ளார்கள். போலிசார் அவர்களை பிடித்து விசாரிக்க, அவர்கள் தாமாக முன்வந்து இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள். அதனை தொடர்ந்து, அவர் கைது செய்யப்பட்டு, அவர்கள் அளித்த தகவலின் அடிப்படையில், எதிரி செல்லப்பா என்பவர் வீட்டிலிருந்து இவ்வழக்கின் திருட்டு பொருட்களை போலிசார் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியுள்ளார்கள். பிறகு எதிரிகள் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டு, போலிசார் புலன்விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக இ.த.ச. பிரிவுகள் 457, 380ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்கள். அரசு தரப்பு வழக்கு இவ்வாறு அமைந்துள்ளது. இந்நீதிமன்றத்தால் எதிரிக்கு எதிராக இ.த.ச. பிரிவுகள் 457,380–ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

8.2) **அரசு தரப்பு சாட்சி 1ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அவர் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சார்பாக சாட்சியமளித்த சீர்காழி காவல்நிலையத்தின் தற்போதைய உதவி ஆய்வாளர் என்பது தெரிய வருகிறது. அவர் தனது முதல் விசாரணையில், கடந்த 18.06.2013ம் தேதி மதியம் 13.00 மணியளவில் உதவி ஆய்வாளர் சித்தார்த்தன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது, அ.சா.1 கொடுத்த புகார் மனுவை பெற்று இ.த.ச. பிரிவுகள் 457,380ன் கீழ் குற்ற எண் 260/2013ல் வழக்கு பதிவு செய்தது பற்றியும், அன்றையதினமே 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது பற்றியும், பட்டியல் சாட்சி 1–5 ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தது பற்றியும், 20.06.2013ம் தேதி மாலை 16.30 மணிக்கு எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:17:35 +0530

அனுப்பி வைத்தது பற்றியும், அவர்கள் தாமாக முன்வந்து இவ்வழக்கு குற்ற செயலை செய்ததை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தது பற்றியும், அதைத் தொடர்ந்து மறைத்து வைத்திருந்த இவ்வழக்கு சொத்தை எதிரி தமிழரசனின் வீட்டில் இருந்து கைப்பற்றியது பற்றியும், இறுதியாக இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 457,380 ஆகியவற்றின் கீழ் 25.07.2013ம் தேதி அன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது பற்றியும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சி மூலமாக முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர், மாதிரி வரைபடம், ஒப்புதல் வாக்குமூலம் அனுமதிக்கப்பட்ட பகுதிகள், கைப்பற்றுதல் மகசர், படிவம்'95 ஆகியவை முறையே அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9. மேற்படி சாட்சியங்கள் மற்றும் இவ்வழக்கின் சூழ்நிலைகள் ஆகியவற்றை கருத்தில்கொண்டு, **இ.த.ச. பிரிவு 457**ன் கீழான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என பரிசீலிக்கும்போது, மேற்படி சட்டப்பிரிவானது சிறைத்தண்டனைக்குரிய குற்றம் எதையேனும் செய்வதன் பொருட்டு, இரவில் பதுங்கி வீட்டினுள் அத்துமீறி நுழைதலை அல்லது இரவில் கன்னமிடுதலை தண்டனைக்குரிய குற்றமாக கருதுகிறது. அதேபோல, **இ.த.ச. பிரிவு 380** சட்டப்பிரிவானது மக்கள் குடியிருப்பாக பயன்படுத்தக்கூடிய கட்டிடத்தில் திருடுவதை தண்டனைக்குரிய குற்றமாக கருதுகிறது. இவ்வழக்கின் பொருண்மைகள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில் முதலாவதாக எவருடைய இருப்பிடத்திற்குள்ளேனும் இரவு நேரத்தில் பதுங்கி நுழையும் அல்லது கன்னமிடும் செயல் மற்றும் திருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை பற்றி ஆராய்ந்து பார்க்கும்போது, அ.சா.1 தனது புகாரில், கடந்த 17.06.2013 அன்று இரவு சீர்காழி, கோவில்பத்து, பள்ளிவாசல் தெருவில் அமைந்துள்ள அ.சா.2 ஹபிபுல்லா என்பவருடைய பூட்டப்பட்டிருந்த வீட்டின் மாடி ஜன்னல் உடைக்கப்பட்டு வீட்டில் இருந்த SONY கம்பெனியை சேர்ந்த LCD TV, DVD Player, Home Theatre Unit மற்றும் தையல் மிஷின் ஆகியவை திருட்டு போனதாக குறிப்பிட்டுள்ளார். அ.சா.1 அளித்த புகார்(அ.சா.ஆ.1) மற்றும் அதைத் தொடர்ந்து பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை(அ.சா.ஆ.2) உள்ளிட்ட சான்றாவணங்களையும், அ.சா.1 ஆன விசாரணை அதிகாரியின் வாய்மொழி சாட்சியங்களையும் வைத்துப் பார்க்கும்போது, இவ்வழக்கில் சம்பவ நாளன்று புகார்தாரரின் வீட்டில் மேற்சொன்ன பொருட்கள் மர்ம நபர்களால் அத்துமீறி உள்ளே நுழைந்து களவாடப்பட்டுள்ளது தெரியவருகிறது.



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:17:44 +0530

10. இரண்டாவதாக, எவரால் மேற்படி அத்து மீறல் மற்றும் திருட்டு மேற்கொள்ளப்பட்டது என்பது பற்றி ஆராயும்போது, அந்த அத்துமீறல் மற்றும் திருட்டை கண்ணுற்ற சாட்சிகள் என யாரும் இல்லை என்பது தெரிய வருகிறது. அரசு தரப்பில் எவ்வாறு எதிரி தமிழரசனை மேற்படி சம்பவத்தோடு தொடர்புபடுத்துகிறார்கள் என்பதை பற்றி பார்க்கும்போது, மேற்படி சம்பவம் பற்றிய புகாரினை சம்பவத்திற்கு மறுநாளான 18.06.2013 தேதியன்று பெற்ற போலிசார் அதனை விசாரித்து வந்த நிலையில், கடந்த 20.06.2013ம் தேதி மாலை 16.30 மணிக்கு சீர்காழி ரயில்வே ஸ்டேசன் அருகில் சந்தேகப்படும்படியாக நின்று கொண்டிருந்த எதிரிகள் மூவரையும் பிடித்து விசாரித்ததாகவும், அவர்கள் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அதன்பேரில் 1ம் எதிரியின் வீட்டில் இருந்து திருட்டுப் போன இவ்வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டதாகவும் அரசு தரப்பு வழக்கு அமைந்துள்ள நிலையில், அந்த ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக தாய்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.3, ஒப்புதல் வாக்குமூல உள்ள சாட்சி கையொப்பங்களில் தன்னுடையது எதுவும் இல்லை, இந்த வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் சொல்லி பிறழ் சாட்சியாகியுள்ளதை வைத்து பார்க்கும்போது, இவ்வழக்கு எதிரிகளுக்கு எதிராக ஜோடிக்கப்பட்ட வழக்காக இருக்கலாம் என்கிற நியாயமான சந்தேகம் எழுகிறது. அதேபோல, இவ்வழக்கின் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளுள் ஒருவர் பிறழ்சாட்சியாக ஆன நிலையிலும் கூட, மற்றொரு நபர் சாட்சியாக அரசு தரப்பில் விசாரிக்கப்படவில்லை. தாய்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய இருவரும் கேள்விநிலை சாட்சிகள் மட்டுமே ஆவார்கள். அதுபோக, சம்பவ இடத்தில் இருந்ததாக சொல்லப்படும் நெடுஞ்செழியன் என்னும் காவலாளி இவ்வழக்கில் விசாரிக்கப்படவில்லை. மேற்சொன்ன வகையில், அரசு தரப்பு வழக்கில் இத்தனை குறைகள் காணப்படும் நிலையில், எதிரிக்கும் குற்ற சம்பவத்திற்குமான தொடர்பு நிரூபணம் செய்யப்படாத நிலையில், விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரி தான் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட புகார்தாரரின் வீட்டில் இரவு நேரத்தில் பதுங்கி உள்ளே நுழைந்து, ஜன்னலை உடைத்து பொருட்களை திருடினார் என முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று கருதி அரசு தரப்பு வழக்கில் அமைந்துள்ள சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிப்பது உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11. 2ம் எதிரி இறந்துவிட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது. முடிவாக, அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக எதிரி தமிழரசன் (எ) செல்லப்பா மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 457, 380ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:17:51 +0530

என முடிவு செய்து எதிரியை மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என குற்ற விசாரணை முறை சட்டம் 248(1) பிரிவின் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

12. இவ்வழக்கு சொத்தான C.P.No.144/2013ல் தாக்கல் செய்யப்பட்ட 1. LCD (SONY) TV, 2. DVD Player(SONY), 3. தையல் மிஷின் வெள்ளை கலர் ஆகிய பொருட்களை மனுதாரர் இடைக்காலமாக பெற்றுச்சென்ற மனுதாரர் அவற்றை நிரந்தரமாக வைத்துக் கொள்ளவும், பிணைமுறியை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள் ஆகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:17:58 +0530

நீதித்துறை நடுவர்,
சீர்காழி.

1. அரசுத் தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி.1 | திரு. வீரராகவன் | தற்போதைய உதவி ஆய்வாளர் |

2. அரசு தரப்பு சான்றாவணங்கள்:

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சான்றாவணம்–1/ அரசு தரப்பு சாட்சி.1 | 18.06.2013 | புகார் மனு |
| அரசு தரப்பு சான்றாவணம்–2/ அரசு தரப்பு சாட்சி.1 | 18.06.2013 | முதல் தகவல் அறிக்கை |
| அரசு தரப்பு சான்றாவணம்–3/ அரசு தரப்பு சாட்சி.1 | 18.06.2013 | பார்வை மகஜர் |
| அரசு தரப்பு சான்றாவணம்–4/ அரசு தரப்பு சாட்சி.1 | 18.06.2013 | மாதிரி வரைபடம் |
| அரசு தரப்பு சான்றாவணம்–5/ அரசு தரப்பு சாட்சி.1 | 18.06.2013 | ஒப்புதல் வாக்குமூலம் அனுமதிக்கப்பட்ட பகுதிகள் |

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சான்றாவணம்–6/ அரசு தரப்பு சாட்சி.1 | 18.06.2013 | கைப்பற்றுதல் மகசர் |
| அரசு தரப்பு சான்றாவணம்–7/ அரசு தரப்பு சாட்சி. 1 | 18.06.2013 | படிவம்'95 |

3. அரசு தரப்பு சான்று பொருட்கள்: C.P.No.144/2013ல் தாக்கல் செய்யப்பட்ட 1. LCD (SONY) TV.
2. DVD Player(SONY), 3. தையல் மிஷின் வெள்ளை கலர்

4. எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :இல்லை

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:18:07 +0530

நீதித்துறை நடுவர்,
சீர்காழி.

குறிப்பு

1.தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2.இவ்வழக்கு விசாரணையின்போது எதிரிகள் நீதிமன்ற பிணையில் இருந்து வருகின்றார்.
3.இவ்வழக்கில் சாட்சிகள் 3 முறைக்கு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அழைக்கப்படவில்லை.

நகல்
1)மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், மயிலாடுதுறை அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.